## முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

**ந.க. எண். 500 /மாஓ3/EMIS/ஒபக/2021** **நாள் : .09.2021**

**பொருள்:** வேலூர் மாவட்டம் – குறுவளமைய அளவிலான அனைத்து வகைப் பள்ளிகள் – EMIS சார்ந்த பணிகள் முழுமையாக செய்து முடித்தல் – ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு அறிவுரை வழங்குதல் சார்பாக.

**பார்வை :** சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2064/பிடி11/இ2/2021, நாள்.08.09.2021.

*********

பார்வையில் காணும் சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகளுக்கிணங்க வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் EMIS சார்ந்த பணிகள் அனைத்தையும் தொய்வின்றி முழுமையாக முடித்தல் அவசியம். இதற்கென குறுவளமைய வாரியாக நியமிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்றுநர்கள் வரும் 13.09.2021 முதல் 17.09.2021 முடிய 5 நாட்களிலும் அவரவர்க்கு ஒதுக்கப்பட்டுள்ள, குறுவளமையத்திற்குட்பட்ட அனைத்து வகைப் பள்ளிகளிலும் கீழ்க்காணும் தலைப்புகளில் உள்ள EMIS பணிகளை முழுமையாக முடிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்தல் வேண்டும். இதற்கான பள்ளிவாரியன அறிக்கைகள் 12.09.2021–ன்படி இத்துடன் அனுப்பலாகிறது.

ஆசிரியர் பயிற்றுநர்கள் EMIS இணையதளத்தில் School log in–ல் Open செய்து கீழ்க்கண்டவற்றை சரிபார்க்க வேண்டும். குறைகள் இருப்பின் பள்ளிப் பார்வைக் குறிப்பேட்டில் குறிப்பிட்டு அதனை உடனடியாக சரிசய்து முடிக்க வேண்டும்.

1. Common Pool Data
2. Aadhar Updation for students
3. Class teacher Assigning
4. Teacher’s data pending fields
5. Student wrong profile data
6. CWSN VIII to IX Transition pending. (for HS & HSS)
7. Grants (daily expenditure updation)
8. Teacher attendance
9. Student attendance

பார்வைக் குறிப்பேட்டில் எழுதப்பட்ட குறைகள், அதனை நிவர்த்தி செய்யப்பட்ட விவரங்கள் ஆகியனவற்றை சார்ந்த குறுவளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் வைத்திருத்தல் அவசியம். ஒன்றியங்களிலுள்ள அனைத்து குறுவளமையங்களிலும் இப்பணிகள் நடைபெற சார்ந்த ஒன்றியங்களின் வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் (பொ) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**த.பி.பா...**

மேலும் அனைத்து அரசுப் பள்ளிகளும் வேலூர் மாவட்டத்திற்குட்பட்ட, அருகாமையிலுள்ள கனரா வங்கிக் கிளையில் பள்ளியின் பெயரில் (ex : PUPS Ramapuram, PUMS Vettuvanam, GHS Machanur, GBHSS KV Kuppam) தலைமையாசிரியர் மற்றும் SMC உறுப்பினர் (G.O.No.42) சார்ந்து இணைப்புக் கணக்கினை வரும் **17.09.2021–க்குள்** துவக்கி இருக்க வேண்டும். வங்கிக் கணக்கு துவக்கப்பட்ட விவரத்தினை சார்ந்த குறுவளமைய ஆசிரியர் பயிற்றுநர் மாவட்டத் திட்ட அலுவலகத்திற்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும்.

வரும் வார நாட்களில் **20.09.2021–ன்** படி EMIS சார்ந்த Report எடுக்கப்பட்டு வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களால் பள்ளிவாரியாக **22.09.2021** அன்று "Review Meeting" நடத்தப்படும் எனத் தெரிவிக்கலாகிறது. அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்களும் Review Meeting–ல் தவறாது கலந்துக்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

**ஓம்.XXXXXX**
**முதன்மைக் கல்வி அலுவலர்,**
**வேலூர் மாவட்டம்.**

**பெறுநர் –**
**1.** அனைத்து மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.
**2.** அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம். (உரிய வழியாக)
**3.**அனைத்து அரசு மேல்நிலை/உயர்நிலை/நடுநிலை/தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்கள்.
**நகல் –** வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
**நகல் –** மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்.
**நகல் –** கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் (ஒபக), வேலூர்.
– அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
**நகல்** – மாநிலத் திட்ட இயக்குநர் (ஒபக), சென்னை–6
– அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.